

பெரம்பூர் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் ஆர்.டி.சேகர் 37வது வட்டத்தில் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் வாக்கு சேகரித்தார்.

கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள் இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# சைதை 169 ‘அ’ வட்டத்தில் - வேட்பாளர் மா.சுப்பிரமணியன் வாக்குச் சேகரிப்பு!

சென்னை, ஏப்.15-

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு. கழக வேட்பாளர் மா. சுப்பிரமணியன் நேற்று (14-4-2026) காலை 7.00 மணிக்கு தொடங்கி இரவு 9.00 மணி வரை 169 (அ) வட்டத்தில் பொன்னியம்மன் கோயில் தெரு, நாயுடு தெரு, வரதாபுரம், கலைஞர் 1 முதல் 3 தெருக்கள், திருவள்ளுவர் 1 முதல் 3 தெருக்கள், யாதவாள் தெரு. மன்னப்ப தெரு, பொன்னியம்மன் கோயில் தெரு, துலுக்கானத்தம்மன் கோயில் தெரு, ஏரிக்கரை சாலை, பொன்னியம்மன் கோயில் தெரு வழியாக புது தெருவில் 12.30 மணி வரையும் உணவு இடைவேளைக்குப் பிறகு மாலை 4 மணிக்கு சூர்யா நகரில் தொடங்கி ரஞ்சித் சாலை, மருது அவென்யூ தண்டபாணி தெரு, அருணாசலம் தெரு, வள்ளியம்மாள் தெரு, கோட்டூர் கார்டன் / வது பிரதான



சாலை, கிரஸண்ட் சாலை, 2வது லூப் தெரு, கோட்டூர் கார்டன் 4வது தெரு, ரிவர்வீவ் சாலை, இ.டபிள்யூ. எஸ். குவாட்டஸ், வெள்ளையன் தெரு, தண்டபாணி தெரு, கோட்டூர்புரம் சித்ரா நகர், வாட்டர் டேங் காலனி முழுவதும் இரவு 9.00 மணி வரை வாக்குச் சேகரித்தார்.

இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு. மகேஷ்குமார், பகுதி கழக செயலாளர் இரா.துரைராஜ், வட்ட கழக செயலாளர் ஆ.வரதன், காங்கிரஸ் ஜோதி பொன்னம்பலம், வி.சி.க. - ம.ஜேக்கப், தே.மு.தி.க - ஆனந்தன், ம.நீ.ம. - கதிர், எஸ்.டி.பி.ஐ. - அபுதாகிர், பிலால், இ.யூ.மு.லீக் - கவுஸ் ஃபேக், த.மு.மு.க சாகுல்ஹமீது, அப்துல் ஜபார், சி.பி.ஐ. சிவா, சி.பி.எம். - வேல் முருகன், உள்ளிட்ட ஏராளமான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியினர் பங்கேற்றனர்.



மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி தி.மு.கழக வேட்பாளர் அமைச்சர் மா. சுப்பிரமணியனை ஆதரித்து சைதை மேற்கு பகுதி மீனவர் அணி அமைப்பாளர் கோவில் எஸ்.மணி தலைமையில் சைதை மேற்கு பகுதி 142 (அ) வட்டத்தில் உள்ள பழம்பெரும் மீன் மார்க்கெட் அங்காடியில் வட்டகழக செயலாளர் எஸ்.பி. கோதண்டம் வாக்காளர்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் தோழமைக் கட்சிகளை சார்ந்த நிர்வாகிகள், வட்டகழக நிர்வாகிகள், மீனவர் அணியை சார்ந்த நிர்வாகிகள், பெருந்திரளாக பங்கேற்றனர்.



மதச்சார்ப்பற்ற முற்போக்கு கூட்டணியின் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதி தி.மு.கழக வேட்பாளர் டி.ஜெ. கோவிந்தராஜனை ஆதரித்து பூண்டி வடக்கு ஒன்றிய செயலாளர் ஜான் என்கிற பொன்னுசாமி மற்றும் கழக நிர்வாகிகளை சந்தித்து தொகுதி பார்வையாளரும், மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணைச் செயலாளர் சைதை எம். எஸ்.ஹரிபாபு ஆலோசனை வழங்கினார்கள். இந்நிகழ்வில் மாற்று கட்சிகளை சார்ந்த தோழர்கள் கழகத்தில் இணைத்து கொண்டனர். வெல்வோம் இருநூறு! படைப்போம் வரலாறு! எங்கள் வாக்கு உதயசூரியனுக்கு என்ற முழக்கம் இட்டனர்.

# களத்தில் இளைஞர் அணி

களத்தில் இளைஞர் அணி

**மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணி நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று, வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.**



உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதி, மதுரை தெற்கு மாவட்டம்.



போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி, தேனி வடக்கு மாவட்டம்.



உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதி, கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம்.



நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி, திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி, திண்டுக்கல் மேற்கு மாவட்டம்.



பல்லடம் சட்டமன்றத் தொகுதி, திருப்பூர் மத்திய மாவட்டம்.



கூடலூர் சட்டமன்றத் தொகுதி, நீலகிரி மாவட்டம்.



சூலூர் சட்டமன்றத் தொகுதி, கோவை தெற்கு மாவட்டம்.